மதுரை



K. JANAKIRAMAN
No. 6, Arumuga Chetty Street,
C. N. K. Road, Chepauk,
MADRAS - 600 005.

விடுதமிழ்ப் பாசறை, கோவில்பட்டி.

விலை அரு 3:

No. 6, Arumuga Chetty Street, A umugo Chetty Road Chepauk
MADRAS - 600 005 MADRAS

மருதநாயகம்

வசனம் : மு. கருணாநிதி.

குறிஞ்சிநாட்டுக் கொற்றவனுக்கு இரண்டு மனைவிகள். இருவரும் கர்ப்பவதிகள். இளையாளின் அண்ணன் துர்ஜயன், தன் அதிகாரம் நிலைக்க, தங்கையின் குழந்தை தானி ஆளவேண்டுமே என்று அவனுக்குத் தனி ஆசை. அதன் காரணமாக.....

கோபதிவர்மன் :- கொலைகாரி. போதும் உன் கும்மாளம். அங்கே நாசவேலை நடத்திவிட்டு அதை மறைக்க இங்கே நடனம்.

சித்ரா :- என்ன ?

கோபதி :- சிங்காரியின் வாழ்வைச் சிதைக்க நீ போட்டாயே திட்டம், அது செத்துவிட்டது தெரியுமா ? சண்டாளி.

சித்ரா :- திட்டமா ? என்ன ?

கோபதி :- ஆஹா ! என்ன நடிப்பு அக்காமக்காரி, உன்னை அக்கினியில் தள்ளிப் பொசுக்கினாலும் போதாது.

அன்பானந்தர் :- அரசே, கோபம் நீதியை மறைத்து விடும், நிதானமாக....

கோபதி :- நிதானம், அன்பானந்தரே ! நீரே கேளும் இந்த நீலியை !

அன்பா :- மகாராணி, இளையராணி கர்ப்பமுற்றிருப்பதில் தங்களுக்குப் பொறுமை, அந்தக்குழந்தை ராஜ்யத்தில் பங்கு கேட்குமே என்ற பயம். அதன் காரணமாய் இளையராணிக்கு அனுப்பப்பட்ட மருந்தில் தாங்கள் விஷம் கலந்து விட்டீர்கள்.

சித்ரா :- ஆ!

அன்பா :- இது இளைய மகாராணியின் குற்றச்சாட்டு.

சித்ரா :- இதை நம்புகிறீர்களா?

கோபதி :- நன்றாக நம்புகிறேன், சித்ரா சிங்காரியை மட்டுமென்ன, உன் சுயநலத்திற்காக என்னையே கொலை செய்யவும் துணிவாய்!

சித்ரா :- அக்ரமமான கட்டுக்கதை. நான் நிரபராதி! என் நெஞ்சைப் பிளக்காதீர்கள்.

கோபதி :- சீ! தொடாதே. (கீழே தள்ளிவிடுகிறான்)

அன்பா :- அரசே! பூரண கர்ப்பவதி.

கோபதி :- கர்ப்பவதி! சிங்காரியும் கர்ப்பவதிதான்.

சித்ரா :- சுவாமி, சிங்காரியை என் தங்கையாக மதிக்கிறேன். 8451

கோபதி :- பொய், சுத்தப்பொய்!

சித்ரா :- எனக்காக வாதாட யாருமில்லை. சிங்காரியின் பக்கம் அவள் அண்ணன். அவள், அன்புக்குரிய மன்னர். எனக்கு சத்தியம் மாத்திரம்தான் சாட்சி!

அன்பா :- மகாராஜா! விஷய விளக்கத்திற்கு வாதி, பிரதிவாதி இருவரையும் விசாரிக்க வேண்டும்.

கோபதி :- வீண் நம்பிக்கை, இருந்தாலும் குறிஞ்சி நாட்டுக் கொற்றவன் அவசரப்பட்டான், என்ற அவச் சொல் வேண்டாம். நீதிமன்றத்திற்கு நீரே ஏற்பாடு செய்யும்.

துர்ஜயன் :- காளிங்கா, காரியம் கெட்டு விட்டது. எதிர்பார்த்தது நடக்கவில்லை. நாளை நீதி மன்றத்தில் நமது சூழ்ச்சிகள் அம்பலமாகிவிடும். இந்த துர்ஜயன் எங்கோபோக அதிகாரத்திற்கு சமாதி அமைக்கப்பட்டுவிடும். இந்தத்தரணியை என் தங்கையின் மகன் ஆளவேண்டுமென்ற ஆசை அழிபட்டுப்போகும். இதிலிருந்து நாம் மீள வேண்டுமானால் மகாராணி மாளவேண்டும்.

காளிங்கன் :- ஆமாம் !

துர்ஜயன் :- இன்றிரவே நமது திட்டம் நிறைவேறியாகவேண்டும்.

* * *

அன்பா :- இன்றிரவே நமது திட்டம் நிறைவேறியாகவேண்டும்.

சித்ரா :- அப்படியானால், நான் அரண்மனையைவிட்டு ஓடவேண்டுமா ?

அன்பா :- ஆம் அம்மணி ! இந்த ஆபத்திலிருந்து விடுதலை பெற வெளியேறித்தான் ஆகவேண்டும்.

சித்ரா :- வெளியேறி அரசருக்கு வருத்தத்தை அதிகமாக்குவதைவிட உயிர் விடுவது மேல்.

அன்பா :- இல்லை, தங்கள் உயிர்பெரிதல்ல மகாராணி! தங்கள் வயிற்றில் தவழும் அந்த மாணிக்கம் குறிஞ்சிநாட்டு மகுடத்திற்கு வீற்றது. அதைக் காப்பாற்ற இத்தியாகம் செய்யத்தான் வேண்டும்.

சித்ரா :- நான் எங்கே செல்வேன் அமைச்சரே !

அன்பா :- சுரங்கத்தின் மூலம் செல்லுங்கள். அது தங்களை அருகிலுள்ள கிராமத்தில் போய்ச் சேர்க்கும்.

சித்ரா :- அமைச்சரே !

அன்பா :- கவலைப்படாதீர்கள், அரண்மனையில் அரசி வாழும்வரை, அஞ்ஞாதவாசம், பிறகு நியாயம் தங்களை நேரில் மாளிகைக்கு இழுக்கும்.

துர்ஜயன் :- ஆ ! தப்பிவிட்டாள் ! ! .....

அன்பா :- கலையணையை நன்றுகச் சோதித்துப் பார். காளிங்கா நன்றுகச் சோதித்துப்பார்.....காளிங்கா அஹ்ஹஹா !

துர்ஜயன் :- சிரி ! நன்றுகச் சிரி !....சப்தம்போட்டுச் சிரி !... கலகலவென்று சிரி !... இதுதானே உன் கடைசிச் சிரிப்பு... காளிங்கா இந்த மூட்டாளின் பிணம், யார் கண்ணுக்கும் படக்கூடாது. அரண்மனைத் தோட்டத்திலே புதைத்துவிட வேண்டும்.

காட்சி 2.

சேவகன் :- மகாராஜா! எங்கு தேடியும் மகாராணியைக் காணவில்லை.

கோபதி :- ஆ! காணவில்லையா?

தூர்ஜயன் :- அது மட்டுமல்ல, மகாராஜா மந்திரியையும் காணவில்லை!

கோபதி :- தேடிப் போனவர் திரும்பவில்லையா?

தூர்ஜயன் :- தேடிப்போனலல்லவா திரும்ப!

கோபதி :- தூர்ஜயா நீ என்ன சொல்கிறாய்?

தூர்ஜயன் :- சொல்லவேண்டிய விஷயமா இது! மகாராஜா! மகாராணி என்றாலேயே, மந்திரிக்கு தனிப்பாசம்!

கோபதி :- ஆம்! அதுதான் நாம் சொல்லாமலேயே தேடப் புறப்பட்டிருக்கிறார்.

தூர்ஜயன் :- அமைச்சருக்கு அரசாங்கத்தின் தளி ஆசை! அதைவிட மகாராணிமீது அபாரமான அன்பு!

கோபதி :- கான்கூடத்தான் அந்த அரக்கியிடம்அன்பு காட்டினேன்.

தூர்ஜயன் :- மன்னரின் அன்பு மாற்றக் குறைந்தது, மந்திரியின் அன்பு, மகாராணியை மயக்கியது!

கோபதி :- என்ன?

தூர்ஜயன் :- அரண்மனை வாழ்வையும், அமைச்சர் பதவியையும், துச்சமாக மதிக்கக்கூடியது அவருடையஅன்பு!

கோபதி :- ஆ! நினைக்க முடியாத அக்ரமம்!

தூர்ஜயன் :- ஆனாலும் நடந்திருக்கிறது.

கோபதி :- அவ்மானம், பெருத்த அவமானம்!

தூர்ஜயன் :- அயல்நாட்டுக்குத் தெரிந்தால் அதைவிட அவ்மானம்!

கோபதி :- சிங்கத்தின் குகையிலே சதி கடத்திவிட்டனர் சிறு நரிகள்! வாள் முனையிலே விளையாடிவிட்டனர் வைக்கோல் துரும்புகள், கோபதிவர்மன் யார் என்று தெரிந்தும் அவன அரண்மனையிலே அக்ரமம் அநியாயக்காரர்கள், சண்டாளர்கள். துர்ஜயா அந்த துரோகிகளைத் தேடும் வேலை திடமாக நடக்கட்டும். நாடெங்கும் பறை சாட்டுங்கள். அந்த விபசாரியை கண்டதுண்டமாக்கி என் கன் எதிரில் காட்டுங்கள். அந்த ஊதாரிகளின் ரத்தத்தால் குறிஞ்சி நாட்டிற்கு ஏற்பட்ட களங்கத்தைக் கழுவுங்கள். அந்த மாபாதகர்களை மறைத்து வைத்திருப்பவர்கள் யாராயிருந்தாலும் சரி! மரண தண்டனை! சித்ரவதை! ஊம் நடக்கட்டும்.

காட்சி 3.

ராணி :- அப்பா!

மணிபல்லவர்: அப்பா! இதோ பார் அப்பாவுக்கு நீ தேடித் தந்த அருமைான பரிசை. நாடு, நகரம் எல்லாம் துறந்து காட்டுக்குப் போக வேண்டும் உன் அப்பா.

ராணி :- (கடிதத்தைப் பார்க்கிறாள்) மணிபல்லவ, மன்னவா! பெண் அல்லது போர்! இதற்கு உன் சம்மதம் தேவை,

கோபதிவர்மன்.

ஆஹா! என்ன வீரமான எச்சரிக்கை. அப்பா! பதில் எழுதுங்கள் போர்! போர் என்று எழுதுங்கள்.

மணி :- போதும், உன் வாயால் வந்த வினை! குஞ்சு செய்த குற்றம் கோழியின் தலையில் விடிந்தது.

ராணி :. எனப்பா எங்குகிறீர்கள். எறும்புகூட தன் பகையை எதிர்க்கிறதே!

மணி :- ராணி காவேரியின் தண்ணீரை சிவப்பாக்க நான் விரும்பவில்லை. மருதநாட்டு வீரர்களை பிணமாக்க எனக்கு மனமில்லை. நாட்டின் அமைதிக்காக நீ தைரியமனந்து கொள்ளத்தான் வேண்டும்.

ராணி :- அப்பா !

மணி :- எனக்காக நீ இந்த தியாகம்கூட:வா செய்யக் கூடாது ?

ராணி ;- தங்களுக்காக உயிரைத் தியாகம் செய்கி றேன். மானம் தியாகம் செய்யும் பொருள் அல்ல தந்தையே!

மணி :- ராணி ! வெற்றி அவர்கள் பக்கமென்றால் நம் மானம் என்னவது ?

ராணி :- வெற்ற ! அது வீரர்களின் ரத்தம் நிர்ண யிக்க வேண்டிய முடிவு ! அதைப்பற்றி இப்போது என்ன கவலை.

மணி :- வீரர்களின் பலமும், என் பலமும் எனக்குத் தெரியும். உன் உபதேசம் வேண்டாம்.

ராணி :- அப்பா ! தாங்களா இப்படிப் பேசுகிறீர்கள் ! வேலும், வாளும், வாழ்க்கையில் தோழனென்று கூறும் வம்சத்தில் பிறந்த தாங்களா இப்படிப்பேசுகிறீர்கள் ! வெண் கொடுமை சாக்காட்டில், விளையாடும் தோளைங்கள் வெற்றித் தோள்கள் என்று வீரப்பாண்டிய பரம்பரையில் பிறந்த தாங்களா இப்படிப் பேசுகிறீர்கள் ? ஈட்டியின் பாச்சல் கண்டு இமை கொட்டியுவன் கோழை ! இதை இதய கீதமாக்கிக்கொண்ட தமிழனுக்குப் பிறந்த தாங்களா இப்படிப் பேசுகிறீர்கள் ? வெட்கம், இழிவு, நம் நாட்டு சரித்திரத்திற்கே இழிவு. களம், பலகண்ட கதிரவன் சிரிப் பான் ! வீரர்களைத் தாங்கிய இந்த பூமி சிரிக்கும். வேண்டா மப்பா ! வீர வாலாற்றில் களங்கம் வேண்டாம். மானத் திற்குப் பயந்து, மாற்றானுக்கு மகளை கப்பமாக அளித்தார் மணிபல்லவர் என்ற மாநிலம் சிரிக்கும். அந்த மாசு படிய வேண்டாம்.

மணி :- வேண்டாம் ராணி ! உணர்ச்சியற்ற என் உள்ளத்தை சம்மட்டியால் அடிக்க வேண்டாம் புழுவாய் நெளிந்த என்னை புலியாக மாற்றிவிட்டாய் ! கண்ணைப்போல் காப்பதை, அந்தக் காஞ்சிவாயில் தள்ள மாட்டேன் ! கொக்

கரிக்குப் குறிஞ்சி நாடே! பெண் கிடையாது! உன் கொட்டத்தை அடக்கப் போர்!

காட்சி 4.

கோபதி :- போர்! மருதநாட்டானுக்கு அவ்வளவு மண்டைக் கொழுப்பு. கடல் அலைகள்போல் நம்மிடம் படைகள் உண்டென்பது தெரிந்தும் களத்தில் இறங்கத் துணிந்துவிட்டான், கபோதி! இளவரசா! இன்றைக்கு யுத்த முஸ்திபுகள் ஆரம்பமாகட்டும். போர் தளவாடங்கள் புதுப்பிக்கப்படட்டும்.

ரௌத்ரன் :- இப்பொழுதே கேட்டுக்கொள்கிறேன். இந்தப் படையெடுப்புக்கு நான்தான் தளபதி.

கோபதி :- மகிழ்ச்சி! மருதநாட்டு எல்லைக்கோட்டை யை அழித்துவிடு. குறிஞ்சிநாட்டுக் கொடியை மணிபல்ல வன் மாளிகையில் பறக்கவிடு.

தூர்ஜயன் :- கத்தி யில்லாமல் ரத்தம் சிந்தாமல் வெற் றிமாலை சூட வழி இருக்கும்போது.....

ரௌத் :- என்ன மாமா வழி?

தூர்ஜயன் :- எதிரிகள் தூங்கும்போது படையெடுப் பது. மறைந்திருந்து தாக்குவது. இந்த போர் முறையில் ரத்தச்சிலவு அதிகமில்லை, ஆனல்மூளைக்குக்கொஞ்சம் வேலை.

ரௌத் :- மாமா சொல்வது மகத்துவமான தத்துவம்

கோபதி :- வெகு அருமையான தத்துவம். அவர் இஷ்டம்போல் நடக்கட்டும்

தூர்ஜயன் :- எனக்குத் திருமணம் இப்போது தேவை இல்லை. ராணி! அந்த அகம்பாவத்தை இப்போது பார்க் கிறேன்.

காட்சி 5.

ரௌத்ரன் :- கொக்கரிக்கும் குறிஞ்சிநாடே பெண் கிடையாது. போர்! மணிபல்லவமோ உமது மாளிகையில், குறிஞ்சிநாட்டுக் கொடி பறக்கிறது.

துர்ஜயன் :- அதோடு மருதநாட்டு மானமும்சேர்ந்து பறக்கிறது.

ராணி :- மார் தட்டிக்கொள்ளாதீர்கள். நின்று எதிர்க்கமுடியாத கோழைகள்!

துர்ஜயன் :- அன்று கடல்மடை திறந்தாற்போல் கர்ஜித்தாயே! இதோ பார் நீ அலட்சியப்படுத்திய ஆணழகன்! உன்னை அடிமையாக்க வந்திருக்கிறான்! வீராதிவீரனுக! வெற்றி சிங்கமாக! (சிரிப்பு) உன் வாழ்க்கைத் துணைவனுக!

ராணி :- வஞ்சக நரிகள்! புலியைக் கூண்டில்போட்டு பூட்டிவிட்டு போர் பிரசங்கம் செய்யும் சோதாக்கள்!

துர்ஜயன் :- உன் புலம்பலைக் கேட்க நேரமில்லை. மணத்திற்கு உன் சம்மதம் அல்லது மணிபல்லவனின் மரணம்!

மணி :- ராணி! சம்மதிக்காதே, என்னைச் சித்திரவதை செய்தாலும் சரி! என்னை நெருப்பில் தள்ளி பொசுக்கினாலும் சரி! என் பிணத்தை காக்கைக்கும் கழுகிற்கும் விருந்தாக்கி, அந்தக் காட்சியை உனக்குக்காட்டினாலும் சரி இந்த சண்டாளனை மணக்கச் சம்மதிக்காதே.

துர்ஜயன் :- சம்மதிக்க வைக்கிறேன்! இப்போது என்ன சொல்கிறாய்!

ராணி :- வேண்டாம், விடுங்கள்.

துர்ஜயன் :- முடியாது! நீ மணத்திற்கு சம்மதித்தாலன்றி விடமுடியாது.

ராணி :- சம்மதித்தேன். அவரை விடுங்கள்!

துர்ஜயன் :- நானைக்கு பயணம், தயாராகிக்கொள்! அதற்குள் நீ தப்ப முயன்றால் உன் தந்தையின் தலை தரையில்உருளும் ஜாக்கிரதை! இவனைப்பாதுகாப்பில் வையுங்கள்!

காட்சி 6.

காண்டிபன் :- எங்கே ராணி? எங்கே? ராணி! ராணி இளவரசி! என் ராணி இளவரசியா!.....

ராணி :- ஆம்! இளவரசிதான்.

காண் :- வேலைக்காரி என்றுயே வேஷக்காரி! சண்டாளி! உன் கண்களில் பொங்குகிறதே அந்தக் காமம்! உன் உதடுகளின் இடுக்கில் வடிகிறதே அந்த நஞ்சு! இவைகளை வைத்துக்கொண்டு, என் நம்பிக்கையை அணு அணுவாக சிதைத்துவிட்டாயே, அரண்மனை பிசாசே!

ராணி:- தங்கள் காதலைப் பெறுவதற்காக.

காண் :- காதல்! உன் காம வெறிக்காக போட்ட திரையின் பெயர், காதல்! அழுக்கல் நாற்றத்திற்குப் பெயர், அந்திமல்லிகையின் வாடை ஆஹா! ஆலகால விஷத்தை அமிர்தம் என்று எண்ணி ஏமாந்தேன்! அஸ்தமனத்தை உதயம் என்று நினைத்து அடியோடு கெட்டேன்! நரகமென்று ஒன்று இருந்தால் உன் நரம்பிற்கு ஒரு நாகத்தை விட்டு கடிக்கவிடுவேன். அப்போதும் இந்தக் கள்ளியின் நம்பிக்கை நிவர்த்தி கிடையாது. இளவரசி இரக்கமற்ற பேய்! ஏழைகளை வாட்டி அவர்கள் எலும்பைத் தின்று உடலை மெருகேற்றிக்கொண்ட ராசவம்சத்தில் உதித்த பிரம்ம ராக்ஷசி! உன் வன்ப்பால்என்னை மயக்கி, வாக்குவசீகரத்தால் என் வாலிபஉள்ளத்தை உருக்குலைத்து நடுத்தெருவில் விட்டு விட்டாயே நாசகாரி! உன்மேல் தவறில்லை! மன்னர்களுக்கு புதுப்புது ராஜ்யங்களைப் பிடிக்கும் ஆசை! அவன் மகளுக்கு புதுப்புது கணவனைப் பிடிக்கும் ஆசை!

ராணி :- இளவரசி ஆணையிடுகிறேன், தயவுசெய்து வெளியேறுங்கள்!

காண் :- வெளியேறுகிறேன், ஆனல் வெறுங்கையுடன் போக உத்தேசமில்லை, காமவெறியேற்றி என்னைக் கலங்கச்செய்த உன் விழிகளைப் பிடுங்கிக்கொண்டுதான் வெளியேறுவேன்! நம்பினவனை நட்டாற்றில் விட்டதுமல்லாமல், வெளியே செல்லுங்கள் என்று ஆணையிட்ட அந்த இரும்பு இதயத்தை பெயர்த்துக்கொண்டுதான் வெளியேறுவேன். (கழுத்தை நெறிக்கிறான்)

ரம்பா :- சிப்பாய்கள்! சிப்பாய்கள்!

ராணி :- இப்படி ஓடிவிடுங்கள்.

ரௌத் :- என்ன சதி நடத்துகிறாய்? எங்கு வந்தாள் அவன்.

ராணி :- என்னைக் கேட்டுக்கொண்டு வரவில்லை.

ரௌத் :- என் வாழ்க்கை வந்த விருந்து தவறிவிட்டது. அந்த ஊதாரி என் கையில் அகப்பட்டிருந்தால் உருத்தெரியாமல் ஆக்கியிருப்பேன்!

ராணி :- வீரர்!

ரௌத் :- சந்தேகமா? உன் அப்பனை என் அடிமையாகிய பிறகும் என் வீரத்தில் சந்தேகமா?

ராணி :- சந்தேகமே இல்லை! தூங்குபவன் தலையில் கல்லைப்போடுவதில் சூராதிசூரர்.

ரௌத :- நான் வேடிக்கை பேச வரவில்லை!

ராணி :- பேசும்படி யாரும் பிராத்திக்கவில்லை!

ரௌத் :- போதும் உன் துடுக்கு உன்னை இப்படியே விட்டுவைத்தால், நீ எப்படியும் சப்பிவிடுவாய், ஏய்! பிரயாணத்திற்கு தயார் செய்யுங்கள்!.....

காட்சி 7

(ரௌத்திரன், காண்டீபன் குரலில் பேசுகிறான்)

ரௌத்திரன் :- ராணி..... ராணி, வா, வா.. ஆஹா முகிலைக்கிழித்து வெளிக்கிளப்பும் முழுமதி உன் சிரிப்பு.

ராணி :- தங்களைப்போல் என் அதரங்கள், கரி நிறமா?

ரௌத் :- அந்திவானத்தின் அழகு வர்ணம் கண்ணே

ராணி :- எங்கே இருக்கிறீர்கள்? என்னைத் தொடுகள். தொடமாட்டீர்களா? என்னைப் பிடிக்கவில்லையா?

ரௌத் :- பனியைத் தொடும் இன்பம் உன்னை தொடும் இன்பமன்றே! கனியைச் சுவைப்பதை உன்னத்தைச் சுவைத்தபின்!

ராணி :- இன்பஷிடிவெள்ளி மூனைத்துஷிட்டது இனிமேல்

ரௌத் .- பச்சைக்கிளி நான் ! பழக்கொலை நீ !

ராணி :- காதற் சோலையில் !

ரௌத் :- கிளியைப் பறக்கவிடமாட்டேன் !

ராணி :- ஆ...!

துர்ஜயன் :- கிளி.. இனிமேல் குறிஞ்சிநாட்டு மாளி கையில் கூழலைமொழி பேசும் குறுகுறுவென விழிக்கும் இளவரசமேடு குலவும்!

ராணி :- நல்ல கனவு:

துர்ஜயன் :- கனவாகாமல் இருக்கக் கிளி கொஞ்ச நாள் கூண்டிலேயும் அடைபட்டிருக்கும்.

ராணி :- வாய் சொல் வீரன்.

ரௌத் :- வீரத்தைச் செய்கையில் காட்டுகிறேன்பார்.

துர்ஜயன் :- பொறு ரௌத்ரா அவளையுந்தான் கொஞ் சம் பேசவிடுவோமே. மிரளுகின்ற மானென்ன உறுமு கின்ற சிங்கமா? ஊம் பேசம்மா பேசு.

ராணி :- பெண்களைக் காமப்பதுமைகளாக நினைத்து விட்ட பைத்தியக்காரர்களே நீங்கள் வீரர்களாக இருந்தால் என் கையில் ஒரு வாளைக் கொடுத்துவிட்டுப் பேசுங்கள்.

துர்ஜயன் :- பறவையைக் கண்ணிவைத்துப் பிடிக்க வந்திருக்கிறேம், காயப்படுத்தியல்ல.

ராணி :- வஞ்சக வேலைக்கு வாக்கு சாதுர்யம் என்ற தரை, நினைத்துப் பாருங்கள். ஒரு பெண் அனுதையாய் இருக்கும்போது இப்படி அக்ரமமாக நடந்துகொள்வது தான் மனித தர்மமா? நீங்களும் பெண்களோடு பிறந்திருப் பீர்களே இது நீதியா சொல்லுங்கள். கருத்துக்கு இசைந்த காதலுக்காக, நாடுநகரம், மாடமாளிகை இத்தனையும் தியா கம் செய்ய துணிந்திருக்கும் என் காதலுக்காவது மதிப்புத் தரக்கூடாதா? சகல சாஸ்திரம் படித்திருப்பீர்களே! சகல கலை கற்றிருப்பீர்களே! சட்டப் புத்தகக்கைப் புரட்டியிருப்

பீர்களே! சத்தியமாகச் சொல்லுங்கள் இது தர்மமா? முறையா?

ரௌத் :- அன்று அரண்மனையில் காளி வேஷம் போட்டாய், இன்று கண்ணீர் விட்டுக் கெஞ்சுகிறாய் கள்ளி.

துர்ஜயன் :- கண்ணீர் பெண்களின் கடேசி ஆயுதம், ஆண்களை எதிர்க்கும் கேடையம், ராணி அக்கினி ஆஸ்திரத்தை வீசிப்பார்த்தாய் இப்பொழுது வருணாஸ்திரத்திற்கு வந்திருக்கிறாய். மோகனாஸ்திரத்தை வீசினாலல்லாது இளவரசனை ஜெயிக்க முடியாது.

ரௌத் :- என்ன விழிக்கிறாய்?

துர்ஜயன் ;- காளியிடம் கருணை கேட்பாள். அது எங்கள் ராஜாங்கத்துக் காளி.

ராணி :- எனக்கு யாரும் கருணை காட்ட வேண்டிய தில்லை. நான் தமிழச்சி, கண்ணகி மரபிலே உதித்தவள். கற்பு என்னை காப்பாற்றும்.

ரௌத் :- காப்பாற்றும் அதைத்தான் பார்ப்போமே.

காண் :- விடு அவளை!

காட்சி 8.

(ராஜ தர்பார்)

கோபதி :- நீ குற்றவாளி இதை ஒப்புக்கொள்ளுகிறாயா?

காண்டி :- என்னை ஏன் கேட்க வேண்டும். நேர்மையான விசாரணைக்குப் பிறகு நீங்கள் தீர்ணயிக்க வேண்டிய முடிவு அது.

துர்ஜயன் :- விசாரணை மகாராஜா வெளிச்சத்தில் விளக்கு தேவை இல்லை. இந்த வழக்கிற்கு விசாரணையே தேவை இல்லை.

கோபதி :- இருக்கலாம், சொந்த கண்களையே நம்ப முடியாத இந்தக்காலத்தில் அவசரப்பட்டு நீதியை அழித்து விடக்கூடாது. காண்டிபா மனச் சாட்சிக்கு விரோதமின்றிச் சொல். நீ கொலை செய்தது உண்மைதானே?

காண்டி :- உங்கள் மன ஆறுதலுக்காக நான் கொலைக் குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமா? மகாராஜா நீதியின் சாயாத பண்பு தங்களிடம் இருந்தால் தயவுசெய்து ஆலோசியுங்கள். மகனின் பிரிவு மனப்பதட்டத்தை அதிகப் படுத்தும். ஆனல் ஒரு கொலை மற்றொரு கொலைக்கு சாந்தி ஆகாது.

துர்ஜயன் :- இது குற்றவாளிக் கூண்டு, குருநாதர் பீடமில்லை. இளவர்சனைக் கொன்றது நீ, இதற்கு உன் ஆட்சேபம்.

காண்டி :- நிறைய இருக்கிறது. ஆண்கள் நுழையக் கூடாத காளி கோவிலில் துர்ஜயனுக்கும் ரௌத்திரனுக்கும் அந்த நேரத்தில் அங்கு வேலை.

துர்ஜயன் :- பொய், சுத்தப்பொய். அரசே இவனை கைது செய்த அத்தனை சிப்பாய்களையும் கேளுங்கள். என்னை காளிகோயிலில் பார்த்தவர்கள் யாராவது இங்கு இருக்கிறார்களா? உயிர் பிழைப்பதற்காக உழுத்த வாதங்களை அள்ளி வீசுகிறான் உன்மத்தன்! மன்னரின் நீதிமன்றத்தை அவ்வளவு மட்டமாக நினைத்துவிட்டான் மண்டூகம்!

காண்டி :- நீதியை வரவழைக்க நேரம் தெரியாமல் இவன் வரட்டுக் கூச்சலுக்கு ஒதுக்கியிருக்கும் இந்த இடத்திற்கு பெயர் நீதிமன்றமா? இங்கு வழங்குவதற்குப் பெயர் தான் நீதியா?

கோபதி :- என்ன?

துர்ஜயன் :- தெய்வ நீதி வேண்டுமென்கிறான் தகடு தத்தக்காரன்.

காண்டி :- இல்லை. மனித நீதி போதும் என்கிறேன் மன்னர். மன்னர் மகனைக் கொன்றதாக நான் இதற்கு நீதி தேவன் ஸ்தானத்தில் வீற்றிருக்க வேண்டியது மன்னரல்ல இந்த மானிலத்து மக்கள்.

சபையோர் :- ஆம் மகாராஜா குற்றவாளியின் வாதமும் பொருத்தமானதுதான்,

துர்ஜயன் :- பொருத்தமானது. மன்னரையே ஒரு பிரஜை கொன்றுவிட்டு அந்தக்கொலை விசாரணைக்கு பிரஜைகளே தீர்ப்புக் கூறுவது அதைவிட பொருத்தமானது.

கோபதி :- சரியாகச் சொன்னீர். சட்டத்தை மீறி நீ காளிகோவிலில் நுழைந்தது ஒரு குற்றம்.

காண்டி : இல்லை சட்டத்தை மீறினது நான் அல்ல. தங்கள் மகன்.

துர்ஜயன் :- இறந்துபோன இளவரசனைப்பற்றி இங்கு பேச்சில்லை.

காண்டி :- அப்படியானால் இந்த விசாரணையேதேவை இல்லை.

சபையோர் :- கேள்விக்குப் பதில். உன் கேலிக்கு நேரமில்லை.

காண்டி :- நேர்மை கேலியாகத் தோன்றுகிறது. நீதி இருட்டிலிருப்பதால் அறிவு குருடாகிவிட்டதா? மகாராஜா கேளுங்கள்! சபையோர்களே கேளுங்கள்!

துர்ஜயன் :- கேளுங்கள்! கேளுங்கள்! நன்முகக் கேளுங்கள்!

காண் :- என் காதலியைக் கைப்பற்ற துர்ஜயனும் சௌத்திரனும் முயன்றார்கள். அதற்காக கள்ளர்கள் நடுங்கும் நள்ளிரவில் காளி கோயிலுக்குள் நுழைந்தார்கள். நானும் தொடர்ந்தேன் அங்கு, என் தோகைமயிலாலே இந்த துரோகிகள் தொட்டு இழுத்தனர். நான் ஏழைதான், ஏழை என்றால் இதயம் இருக்காதா! பாவையர் வேட்டையாடும் இந்த பாபிகள்மேல் பாய்ந்தேன். இந்த பயந்தாங்கொள்ளி எங்கேயோ பதுங்கிவிட்டான். பிறகு போர், வாள்ப்போர், மல்ப்போர், எங்கிருந்தோ ஒரு கட்டாரி எனக்கும் தெரியாமல் சௌத்திரன் உயிரைக் குடித்துவிட்டது. இந்தக் கொலையைப்பற்றி எனக்குத் தெரிந்தது இதுதான்.

சபையோர் :- இதற்கு எல்லாம் சாட்சியங்கள்?

காண்டி :- கிடையாது.

துர்ஜ:- சாட்சியம் இல்லாத வாக்குமூலம், சாரீரமில்லாத சங்கீதம் அம்பலத்திற்கு வர முடியாது. அரசே. நானும் ரௌத்திரனும் காளி கோயிலில் நுழைந்தோம். இது காண்டிபனின் வாதம். இவனே கைதுசெய்த அத்தனை சிப்பாய்களுக்கும் தெரியாமல் நான் எங்கே பதுங்கிவிட்டேன். நான் என்ன கண்கட்டி வித்தைக்காரனு? அல்லது கடவுள் அவதாரமா? உண்மை அதுவல்ல. ராணி காளி கோயிலில் இருந்திருக்கிறாள், காண்டிபன் அவளைச் சந்திக்கச் சென்றிருக்கிறான் கள்ளக் காதலின் காமவேட்கை அது. ரௌத்திரன் அதைக்கவனித்திருக்கலாம். ஆனால் அதற்கும் கொலைக்கும் என்ன சம்பந்தமென்பீர்கள்? ஏன் இவனே ரௌத்திரனே காளி கோயிலுக்கு இழுத்துச்சென்றிருந்தால்! இவன் வலையில் சிக்கி அந்த சுத்தவீரனை இவனே கொன்றிருந்தால்!

காண்டி:- நான் கொன்றிருந்தாலும் அது அநியாயமல்ல. இந்த நாட்டுக்குச்செய்த நல்ல காரியத்தைச்செய்து முடித்ததாக எண்ணுவேன்.

கோபதி:- என்ன?

காண்:- இறந்துபோன இளவரசன் இந்நாட்டு மக்களை காட்டு மிருகம்போல் நடத்தியது உங்களுக்குத் தெரியாதா?

சபையோர்.- இது அவன் ராஜ்யம்

காண்:- ஆண்டவன் ராஜ்யமாக இருக்கட்டுமே! அநீதியை எதிர்க்க பிரஜைகளுக்கு உரிமை உண்டு. எத்தனை இளம் பெண்களின் கற்பு உங்கள் இளவரசன் லீலாவிநோதங்களுக்கு பலி கொடுக்கப்பட்டிருக்கிறது, என் என்று கேட்ட எத்தனை ஏழை மக்களின் ரத்தத்தைப் பார்த்து கோர சிரிப்புச் சிரித்திருக்கிறான் உங்கள் இளவரசன். அவனை விட்டிருந்தால், அவன் பட்டத்திற்கு வந்திருந்தால் பெண்களின் கரங்களை செங்கோலாக்கிக்கொண்டு அந்தப்புரத்தை சபாமண்டபமாக்கிக்கொண்டு, சரசசல்லாபங்களை சட்டப் புத்தகமாக்கிக்கொண்டு ரதி மதன ஆட்சியல்லவா நடத்தியிருப்பான். நல்லாட்சியா நடைபெறும்

இந்த நாட்டில், நாட்டு மக்கள் செய்த பாக்கியம் எனத் தான் படுகொலை செய்யப்பட்டான்.

துர்ஜயன் :- அப்படிச் சொல்! இளவரசன் செய்தது அநீதி அதைத்தடுக்க அவனைக் கொலை செய்தாய்!

கான் :- அந்த புண்ணியம் எனக்குக்கிடைக்கவில்லை!

கோபதி:- பின் யாருக்குக்கிடைத்தது? வரட்டு வாதம் புரியும் வக்கிரபுத்திக்காரா வஞ்சகா! நெஞ்சம் பதரும் செயலைப்புரிந்துவிட்டுநீதி, ஞாயம், நேர்மை இவைகளை பேச வந்துவிட்ட கொலைகாரா! பின் யாருக்குக் கிடைத்தது?

துர்ஜயன் :- இவன் கட்டாரிக்குக் கிடைத்தது! காணைக்கிடைக்காத எங்கள் குலச்செல்வத்தைக்கொல்லும் பாக்கியம் இவன் கட்டாரிக்கு கிடைத்தது!

(மகன் நிரபராதி இங்காட்டு இளவரசன் என்று நிரூபிக்க மகாராணி சித்ரா கட்டாரியுடன் அங்கு காட்சி அளிக்கிறாள்.)

சித்ரா :- இதோ இருக்கிறது அந்தக் கட்டாரி!

கோபதி :- எங்கே?

துர்ஜயன் :- காணுமல்போன என் கட்டாரியல்லவா இது உனக்கு எப்படிக்கிடைத்தது? மகாராஜா னதோ சூழ்ச்சி நடக்கிறது.

கோபதி :- நீ யார்?

சித்ரா :- என்னைத்தெரியவில்லையா? இந்த அபாக்கிய வதியைத் தெரியவில்லையா சுவாமி

கோபதி :- ஆ.....! (ஆச்சரியத்தால்) சித்திரா!

துர்ஜயன் :- சித்திரா!

சபையோர் :- மகாராணி! மகாராணி!! மகாராணி!!!

சித்ரா -: ஆம். மகாராணிதான்!

துர்ஜயன் :- மந்திரி அன்பானந்தரோடு புதுவாழ்வு நடத்தப்போன புனித மகாராணி!

கோபதி :- விபசாரி!

சித்ரா :- ஆ! சுவாமி, என்னைக் கொன்றுவிடுங்கள். அந்த வார்த்தையை மறுமுறையும் கூறுதீர்கள். குழந்

தையைக் காப்பாற்ற ஒரே இடத்திலும், கொடுமை பின் தொடர நான் பெற்ற வைரத்தை ஒரு கிழவியிடம் ஒப்பி வித்து காளி கோயிலில் கண்ணீர் சிந்திக்கிடந்தவள் நான். இதோ குற்றவாளி கூண்டிலிருப்பவன் இந்நாட்டு இளவ ரசன், நம்முடைய மகன்.

காண்டி :- நான் இளவரசனு? என் தாயாரா?

(தன் கையில் வைத்திருந்த பதக்கத்தைக் காண்டிபனிடம் காட்டுகிறாள். அவன் சமூத்தை சடவிப் பாத்துவிட்டு உண்மையிலேயே தன் தாயார் இருப்பதைக்கண்டு)

காண்டி :- அம்மா!

சித்ரா :- கலங்காதே, கண்ணே! இனி நமக்கு நல்ல காலம் தான்.

துர்ஜய :- மகனுக்கு ஒரு நீதி, மற்றவருக்கு ஒரு நீதி என்ற மறபில் மன்னர் பிறக்கவில்லை. மந்திரி அனபானந் தரோடு மகாராணி ஓடியதையும் அவர் மறக்கவில்லை.

கோபதி :- மகனும்! மகன்! காமத்தால் மருத்திழந்து, கள்ள நாய்களோடு ஓடிப்போனவள் காளி கோவிலில் இருந்தாளாம். கதை அளக்கிறாள் கதை! இந்த விபசா ரியைப்பாதாள சிறையில் தள்ளுங்கள். இந்த வேசிக்கு உடந்தையாக இருந்த காளி கோவிலின சட்டம் இன்றோடு ஒழியட்டும்! இவனையும் கொண்டுபோங்கள். இன்றோடு இவன் தலை பலி பீடத்தில் உருளட்டும். பட்டத்தின் இள வரசனைக் கொன்ற இந்தப் பாவியின் பச்சை ரத்தம் பலி பீடத்தை நனைக்கட்டும்.

காட்சி 9.

(தன் மகள் மானத்தையும், தன் மகன் உயிருக்கும் எமனாக இருந்தது துர்ஜயன்தான் என்பதை தன் மகள் மூத் தம்மாளின்மூலம் அறிந்த காளிங்கன் அவன் சூழ்ச்சிகளை வெளிப்படுத்த அரண்மனை செல்கிறான். கோபதிவர்மன், காண்டிபனுக்குத் தீர்ப்புக் கூறிவிட்டு அந்தப்புரத்திலிருக் கிறான்.)

கோபதி :- ரௌத்திரன் உம்முடைய மகனு? எவ்வளவு பெரிய அக்ரமம்!

காளிங் :- அதைவிட அக்ரமம் அன்பானந்தரைக் கொன்று அரண்மனைத் தோட்டத்திலே புதைத்துவிட்டு அரசியுடன் ஓடியதாக அபாண்டம் சுமத்தியது! ... இதோ பாருங்கள், அன்பானந்தரின் எலும்புக்கூடு. அந்தப் புனித மூர்த்தியை நான்தான் புதைத்தேன்.

கோபதி :- எத்தனை பயங்கரச் சூழ்ச்சிகள்!

காளிங் :- அந்தப் பாவியின் செல்வாக்கைப் பலப்படுத்தத்தான்!

கோபதி :- ஆ! துர்ஜயனுடைய மோதிரம்!

காளிங் :- அவசரத்தில் அதைக்கூடக் கவனிக்கவில்லை!

(உண்மையை அறிந்த அரசன், காண்டிபனைக்காப்பாற்ற பலிபீடம் நோக்கி வருகிறான்.) தன்னை மானபங்கம்செய்த துர்ஜயனைப் பழிவாங்க, முத்தம்மாளும் தன்னை ஏமாற்றித் தன் மகனை இளவரசனாக்கி அவனைக் கொன்றான் என்ற கோபத்தில் காளிங்கனும் பலிபீடம் நோக்கி வருகிறார்கள்.)

காட்சி 10.

பலி பீடம்.

துர்ஜய :- நீ, கடைசியாகச் சொல்வது?

காண்டி :- கடைசியாகச் சொல்வது? யாரிடத்தில் சொல்வது! என் உயிரைக் குடிக்கத் துடித்து நிற்கும் சாவிடத்தில் சொல்வதா? என் கழுத்தை நெறிக்கக் காத்திருக்கும் கத்தி இடத்தில் சொல்வதா? அல்லது வழிந்தோடும் என் ரத்தத்தைப் பார்த்து ரசிக்க வந்திருக்கும் உன்னிடத்தில் சொல்வதா? யாரிடத்தில் சொன்னாலும் சரி! யார் கேட்டாலும் சரி? கடைசி நேரத்திலாவது என் இதயத் துடிப்பு ஆவேசமாகத் துடித்து ஓயட்டும்! என் கண்களில் ஒருமுறை கனல்வீசி பிறகு அணைந்து போகட்டும்! என் ரத்தம் சூடேறிக் கொதித்துப் பிறகு ஜில்லிட்டுப் போக

ட்டும்! நீதியின் நிலைக்களமாய், நேர்மையின் உலக்களமாய் வாழ்ந்த வண்டமிழ் வளநாடே! நீ, சூதகர்களின் உறைவிட மாய், சூழ்ச்சியின் இருப்பிடமாய் ஆனது என்? தாய்மை, அன்பு, சத்தியம் : இவைகளை மட்டும் தாங்கிய தங்கத் தாய் நாடே! நீ துரோகிகளை, துன்மார்க்கர்களை, துஷ்டர்களைத் தாங்குவது என்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் எனக்குக் கிடைக்கும் ஒரே பதில், பலிபீடம்! பலிபீடம்!! இந்தப் பயங்கரமான வார்த்தைதானே? ஏ! கொடுமை தாண்டவ மாடும் குறிஞ்சிநாடே! நீ என்னைக் கொல்வதோடு என்ன? தத்தை உறிஞ்சி கொழுப்பதோடு இருக்கக்கூடாதா? என் ராணியின் வாழ்வையுமா வாட்டவேண்டும்? என் ஆசைக் காதலியை என்னிடம் இருந்து பிரித்து, என்னைப் பெற்ற தாயாரைப் பாதாள சிறையில் பூட்டிவிட்டாயே! என் நெஞ்சைச் சிதள் சிதளாகப் பிரிக்கிறாயே! பரஸ்பரத்தாபப் படுகிறாயே! பரிதாபம், ஈவு, இரக்கம் எள்ளளவும் இல்லையா உனக்கு? என்னைக் காதலித்தாள், எனக்கு வாழ்வு அளித்தாள், மானிலம் சாயந்தாலும் உம்மை மறவேன் என்றாள், பூங்காட்டில் புரங்காலும் பூங்குழலாள் எங்கோ போய்விட்டாள்! சாக்காட்டின் அடிவாரத்திலும் அவளைச்சந் திக்கமுடியாத பாவியாகிவிட்டேன்! என் அறிவு வந்த பருவ முதல் என்னைப் பெற்ற அப்பா அம்மா யார் யார் என்று ஏங்கித் தவித்தேன்! மகனே என்று ஒளி வீசும் கண்க ளோடு அன்பு மொழி பேசிய என் அன்னையின் முகத்தைச் சரியாகக்கூடப் பார்க்கவில்லை! அவ்வளவு சீக்கிரத்தில் சாவதா? அந்த ஆனந்தத்தை அக்கிரமக்காரர்கள் ரசிப்பதா? இந்த மண்ணிலேதான் பிறந்தேன்! இந்த மண்ணிலேதான் மழலைமொழி பேசி தவழ்ந்து விளையாடினேன்! இந்த மண் ணிலேதான் சவமாகச் சாயப்போகிறேன். வந்தாரை வாழ வைக்கும் இந்த மண்ணில் சொந்த நாட்டுக்காரன் அநியாய மாகச்சாவதா? குற்றமற்றவன் சாவதா? கொடுமையை நினைக்கவும் தெரியாதவன் சாவதா? என் சாவு உங்களுக்கு ஒரு பாடமாக இருக்கட்டும். இனிமேல் இந்தப் பலிபீடத் தில் நிரபராதிகள் எலும்பு நொறுங்காமல் பார்த்துக்கொள்

ளுங்கள். ஏழைகளை என்னவேண்டுமானாலும் செய்துவிடலாம் என்ற அகங்காரத்தை, ஆணவத்தை அரசாங்கச்சட்டத்தை, அதற்குத் தூபம்போடும் துரோகக்கும்பலை, துர்ஜயன் கூட்டத்தைப் பலிபீடத்தில் நிறுத்துங்கள். சூழ்ச்சியின் முதுகெலும்பைச் சுக்கு சுக்காக நொறுக்குங்கள். துரோகத்தை தூள் தூளாக நொறுக்குங்கள். அக்கிரமத்தை அணுஅணுவாக வீழ்த்.....

(ஆவேசத்தில் கால் இடரி கீழே விழுகிறான் காண்டிபன்) வீழ்ந்தது போதுமினி நாமே வாழ்வோம்! அழிந்தது போதுமினி நாமே ஆழ்வோம்!

துர்ஜயன்:- போதும் உன் ஒப்பாரி! ...ம்நடக்கட்டும்.

[தக்குமேடை மணி ஓசை கேட்கிறது. இரண்டுமுறை கேட்டான், மூன்றும்முறை கேட்கவில்லை. காரணம்? மூன்றும்முறை மணி ஒலித்தால் காண்டிபன் தலை கீழே உருளும் என்று நினைத்த ராணி தன் தலையை மூன்றும் அடிக்கு மேலே பலி கொடுத்தாள். மூன்றும்முறை ஒலிக்காத காரணத்தால் எல்லோரும் திகைக்க, நிமிர்ந்து பார்க்கிறான் காண்டிபன்.]

காண்டி: ராணி!

[சின்ன அரசு குமாரி கீழே விழுந்ததை அறிந்த ரம்பா, ராணியை மடியில் தூக்கிவைக்கிறாள்.)

துர்ஜய:- ....உம் நிறுத்தாதே, நடக்கட்டும்.

(காண்டிபன் சூழ்ச்சியை நொறுக்க கொலையாளி தயாராகிறான்; மறுக்க யாதொரு வழியும் தெரியாமல் திகைக்கிறான் அழுகை அப்போது ரம்பா தும்முகிறாள். தும்மலைக் கேட்டவுடன் தன் வழக்கமான "குதி"யை ஆரம்பித்து வெட்டை நிறுத்துகிறான்.)

துர்ஜய:- டேய்! பிடியுங்கள்.

(அது சமயம், அரசன் தன் மகனைப் பார்க்க அங்கு வருகிறான். தன் மகன் உயிரோடு இருப்பதைப் பார்த்து.....)

கோபதி:- ஆ! காண்டிபா!

அழகு :- விடு! காண்டிபன் இளவாசனு? காண்டிபா! துர்ஜயன், காளிங்கன், முத்தம்மாள் இருவரையும் கண்டு கதிகலங்கி அங்கிருந்து தப்ப முயல்கிறான்.)

துர்ஜயன் :- காளிங்கன், முத்தம்மாள்!

துர்ஜயன் கூட்டத்தில் புகுந்து ஓடுகிறான். தன்னை மான பங்கம் செய்ததற்காக பிரதி உபகாரமாக, தன் கையிலுள்ள பிச்சுவாவினால் வஞ்சம்தீர்த்துக்கொள்கிறாள் முத்தம்மாள்!)

காளிங் :-இருதய சுத்தமில்லாத அத்தனைபேர்களுக்கும் இதுதான் முடிவு!

அழகு:- ரம்பா!

காண்டி :- ராணி...!

ராணி:- ஸ்வாமி...!

காண்டி:- இவள்தான், ராணி! மருதநாட்டு இளவரசி!

கோபதி:- இளவரசர்!

பொதுமக்கள்:- வாழ்க!

காண்டி :- வளம், வழியும் குறிஞ்சிநாட்டுப் பெரு மக்காள், வணக்கம், நான் இந்த மாநிலத்து மன்ன னில்லை. மக்களின் தலைவன், மக்களின் தொண்டன். குறிஞ்சி நாட்டு முடியாட்சி முடிவுற்றது. இனி குடி யாட்சிப் பூத்துக்குலுங்கும், புதுவாழ்வு மலரும், புதுக் கருத்து வளரும், எல்லோரும் ஓர் குலம்! எல்லோரும் ஓர் இனம்!! எல்லோரும் இந்நாட்டு மன்னர்!!!

தலம் !

★

